# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## O.S. 24/2019

## CNR.No.TNCB19000

Date: 05.11.2024 DW1

| பெயர் | கணேஷ்குமார் | வயது | 38 |
|---|---|---|---|
| த/பெ | பொன்மலைச்சாமி | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | தென்பொன்முடி | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | |

The witness sweared under oaths Act 1969 on this the day of 05th November 2024.
பி.வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1ம் பிரதிவாதி பொன்மலைச்சாமி எனக்கு தந்தை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி சண்முகம் எனக்கு சகோதரர் . 1, 2 வாதிகள் 2ம் பிரதிவாதியின் குழந்தைகள் என்றால் சரிதான். வழக்குச் சொத்து என் அப்பாவின் தாத்தா கொமர கவுண்டருக்கு பாத்தியம் உள்ளதா என்றால் இல்லை. கொமர கவுண்டருக்கு பழனி கவுண்டர் மற்றும் 3 மகன்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். பழனி கவுண்டருக்குதான் என்னுடைய தந்தையார் பொன்மலைச்சாமி, அவருடைய சகோதரர் சுப்பையனும் வாரிசுகள் ஆவார்கள்.

பொன்மலைச்சாமிக்கு நானும் 2ம் பிரதிவாதி சண்முகமும் வாரிசுகள் என்றால் சரிதான். கொமர சாமி கவுண்டருக்கு நான் 4-ம் தலைமுறை வாரிசு என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் கொமர கவுண்டரின் மகன்கள் வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொண்டதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் சரியாக தெரியவில்லை. பாகப்பிரிவினையின் அடிப்படையில் கொமர கவுண்டரின் மகன்கள் தனித்தனியாக சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வந்ததற்கான ஆவணங்கள் ஏதேனும் கொடுத்திருக்கிறேனா என்றால் இல்லை.

கொமர கவுண்டருக்கு எந்தெந்த காலையில் எவ்வளவு சொத்து உள்ளது என்றால் பொன்முடியில் சொத்துக்கள் உள்ளது. அதன் காலை எண்கள் 307/2 சி, 295, 294, மற்றவை கள் ஞாபகம் இல்லை. மேற்கண்ட சொத்துக்கள் கொமர கவுண்டருக்கு தனிப்பட்டமுறையில் பாத்தியப்பட்டது. அது சம்பந்தமாக ஆவணங்கள் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. கொமர கவுண்டரின் அப்பா பெயர் நஞ்சப்ப கவுண்டர். அவருக்கும் பூமிகள்

இருந்ததா என்றால் கொமர கவுண்டர் வரைக்கும் தெரியும். மேற்கண்ட சொத்துக்கள் கொமர கவுண்டருக்கு எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது.

கொமர கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் வழக்கு சொத்துக்களில் அடங்கி உள்ளதா என்றால் பகுதி சொத்துக்கள் அடங்கி உள்ளது. கொமர கவுண்டர்உயிருடன் இருந்தபொழுது அவருடைய மகன்களுடன் சேர்ந்துதான் அவருடைய சொத்துக்களை அனுபவித்து வந்தார் என்றால் அதுபற்றி தெரியாது. கொமர கவுண்டர் எப்போது இறந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. பழனி கவுண்டர் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை கிரையம் வாங்குவதற்கு முன்பே கொமர கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

எதன் அடிப்படையில் கொமர கவுண்டருக்கு மேற்கண்ட சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்றால் என் அப்பா சொன்னதை வைத்து சொல்கிறேன். என் அப்பா இறக்கும்போது அவருக்கு வயது 72 ஆகும். அவர் 2019 ம் ஆண்டில் இறந்தார். என் தாத்தா பழனி கவுண்டருக்கு விவசாயத்தை தவிர கூலி வேலை மற்றும் கிணறு வெட்டுவதற்கு செல்வார். பழனிகவுண்டர் எந்த ஆண்டு இறந்தார் என்றால் ஞாபகம் இல்லை. எத்தனை ஆண்டுக்கு முன்பு இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. அவருக்கு பெண் வாரிசுகள் உள்ளார்களா என்றால் ஒரு பெண் உள்ளார்.

1964 ம் ஆண்டு பழனிகவுண்டர் சொத்துக்களை கிரையம் பெறுவதற்கு முன்பு பழனிக்கவுண்டர் என்ன செய்து கொண்டிருந்தார் என்றால் கூலி வேலை செய்து வந்தார். 1964 ம் ஆண்டு வரைக்கும் பழனிகவுண்டர் விவசாயம் செய்து வந்தாரா என்றால் மானாவாரி பூமி என்பதால் விவசாயம் செய்யவில்லை. மானாவாரி பூமி எந்தெந்த காலை எண்ணில் உள்ளது என்றால் 307/2 சி, 294, 295 . மேற்கண்ட க.ச எண்கள் உள்ள பூமி தற்போது எப்படி உள்ளது என்றால் ஆற்று நீர் கொண்டு வந்து விவசாயம் செய்து வருகிறோம்.

மேற்கண்ட விசயங்கள் எனது தந்தை சொல்லி தெரியும். நேரடியாக எனக்கு தெரியாது. அது சம்பந்தமான எந்த ஆவணங்களையும் நான் இதுவரை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் பள்ளேபாளையம் கிராமம் தென்பொன்முடியில் உள்ளது. இதற்கான சார்பதிவாளர் அலுவலகம் மேட்டுப்பாளையத்தில் உள்ளது. எனக்கு என் அப்பா எழுதிவைத்ததாக சொல்லப்படும் உயில் அன்னூர் சார்பதிவாளர் அலுவலத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

( வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி
என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.